

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திமுக சார்பில் பாக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் திருவள்ளூரில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது இதில் கழகத் துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி கலந்துகொண்டு 2026 சட்டமன்ற தேர்தலில் பணியாற்றுவது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் நிர்வாகிகள் கே.திரவிட பக்தன், உள்பட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் பாக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்கள்



துறைமுகம் கிழக்கு பகுதி 56வது வட்டத்தில் அன்னை ஆசீர்வாத மாதா கோவில் தேர் திருவிழாவை முன்னிட்டு மாவட்ட பிரதிநிதி பி.சுகுமார் தலைமையில் நடைபெற்ற நலத்திட்ட வழங்கும் விழாவில் அமைச்சர் பி. கே.சேகர்பாபு 5000 பேருக்கு அன்னதானமும், 500 குடும்பங்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு தலா 25 கிலோ அரிசி மூட்டை வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில் பகுதி கழகச் செயலாளர்கள் எஸ்ஜகரேகர்,எஸ். முரளி ப. ஸ்ரீராமுலு,எம்.சி, வெ. பரிமளம்.எம்.சி.எம்.பரத்குமார், கதிரவன் (எ) ராஜா மற்றும் கழக செயலாளர் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### முதுபெரும் எழுத்தாளர் கொ.மா.கோதண்டம் மறைவு:

# இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.6-

**“முதுபெரும் எழுத்தாளர் கொ.மா. கோதண்டம் மறைவு இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முதுபெரும் எழுத்தாளர் குறிஞ்சிச்செல்வர் கொ.மா. கோதண்டம் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

எளிய குடும்பத்தில் பிறந்து பஞ்சாலைத் தொழிலாளராக தமது வாழ்வைத் தொடங்கிய திரு. கோதண்டம் அவர்கள், அதே எளிய மக்களுக்கான எழுத்தின் மூலமாக இலக்கிய உலகில் தடம்பதித்த மிகச்சிறந்த படைப்பாளி. அதுமட்டுமின்றி சிறார்களுக்கான இலக்கியப் படைப்புகளிலும் பெரும் பங்களிப்பைச் செய்த. இன்றைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

பால சாகித்திய விருது, குடியரசுத் தலைவர் விருது, தமிழ்நாடு அரசின் இலக்கிய மாமணி விருது எனப் பல்வேறு சிறப்புகளைப் பெற்ற இவரது நூல்கள், கடந்த 2025 ஏப்ரல் 5 அன்று நமது திராவிட மாடல் அரசால் நாட்டுடைமை ஆக்கப்பட்டன என்பதையும் நினைவு கூர்கிறேன்.

இத்தனை சிறப்புகள் வாய்ந்த எழுத்தாளர் கொ.மா. கோதண்டம் அவர்களின் மறைவு கலை, இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது மறைவால் வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், சக எழுத்தா ளர்கள் மற்றும் வாசகர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### 10 ஆயிரம் சன்மார்க்க அன்பர்கள் பங்கேற்கும் வகையில்

# சென்னையில் - வள்ளலார் சர்வதேச மாநாடு!

## வடலூரில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்! அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பங்கேற்பு!



வடலூர், அக்.6-

வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (05.10.2025) கடலூர் மாவட்டம், வடலூர், திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையத்தில் நடைபெற்ற அருட்பிரகாச வள்ளலாரின் 203ஆம் வருவிக்க உற்றநாள் விழாவில் கலந்து கொண்டு, சன்மார்க்க கொடியினை ஏற்றி வைத்து, அன்ன தானத்தைத் தொடங்கி வைத்தனர்.

பின்னர், வள்ளலார் சர்வ தேச மைய “பி” பிரிவில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர், அமைச்சர் பி. கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

வள்ளலார் அவர்களின் 203-ஆம் வருவிக்க உற்றநாள் விழா இன்றைய தினம் கலந்து கொண்டு, சன்மார்க்க கொடியினை ஏற்றி வைத்து, அன்ன தானத்தை தொடங்கி வைத்தோம். திருஅருட்பிரகாச வள்ளலார் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில் முதலமைச்சர் அவர்கள் இந்த ஆட்சி ஏற்பட்டவுடன், தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி, வடலூரில் வள்ளலார் சர்வதேச மையத்தை அமைப்பதற்கு ரூ.99.90 கோடியை அரசு நிதியாக வழங்கினார்கள்.

இந்த சர்வதேச மையம் அமைக்க பல்வேறு நீதிமன்ற வழக்குகளுக்கு பிறகு “B” site பகுதியில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, வரும் டிசம்பர் மாதம் வள்ளலாரின் அருந்தவ சீடர்களுக்கு அர்ப்பணிக்கப்படும். மற்றொரு பகுதியான “A”siteல் கட்டுமானப் பணி மேற்கொள்வதற்கு வழக்கு நிலுவையில் இருப்பதால், நீதிமன்ற உத்தரவிற்கு பின் அந்த பணிகளும் மேற்கொள்ளப்படும்.

வள்ளலார் அவர்கள் இந்த நாட்டிற்கு தந்த அறநெறிகளை பாதுகாத்திடும் வண்ணம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திருஅருட்பிரகாச வள்ளலார் பிறந்த அக்டோபர் 5 ஆம் நாள் இனி ஆண்டுதோறும் “தனிப் பெருங்கருணை நாள்” என கடைபிடிக்கப்படும் என அறிவித்தார்கள்.

மேலும், வள்ளலார் அவர்கள்தருமசாலை துவக்கிய 156 வது ஆண்டு தொடக்கம், வள்ளல் பெருமான் இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற 200வது ஆண்டு தொடக்கம், ஜோதி தரிசனம் காட்டுவித்த 152 வது ஆண்டு என மூன்று நிகழ்வுகளையும் இணைத்து அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை 52 வாரங்களுக்கு முப்பெரும் விழாவாக கொண்டாடிட உத்தரவிட்டார்கள்.

இராஜா அண்ணாமலைபுரத்தில் நடைபெற்ற இந்த விழாவின் தொடக்க நிகழ்வில் முதலமைச்சர் அவர்களே கலந்து கொண்டு, “வள்ளலார் - 200” இலச்சினை, தபால் உறை மற்றும் சிறப்பு மலர் ஆகியவற்றை வெளியிட்டு, ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்வையும் தொடங்கி வைத்ததோடு, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிறைவு நாள் விழாவிலும் கலந்து கொண்டு வள்ளலாரின் புகழுக்கு பெருமை சேர்த்தார். அதோடு மட்டுமல்லாமல் முப்பெரும் விழாப் பணிகளுக்காக ரூ.3.25 கோடியை அரசு நிதியாக வழங்கினார்.

சென்னையில் வள்ளலார் அவர்கள் வாழ்ந்த பகுதிக்கு வள்ளலார் நகர் என்று பெயர் சூட்டியதோடு, அந்த பகுதியிலுள்ள பேருந்து நிலையத்திற்கும் அவர் பெயரை சூட்டி பெருமை சேர்த்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். அவரது வழியில் முதலமைச்சர் அவர்கள் வள்ளலார் நகர் பேருந்து நிலையத்தை சென்னை பெரு நகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் ரூ. 6 கோடி செலவில் பயணிகளின் அனைத்து அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற வகையில் உருவாக்குகின்ற பணியை தொடங்கி வைத்துள்ளார்.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல்வருகின்ற நவம்பர் அல்லது டிசம்பர் மாதங்களில் சென்னையில் மிகப்பெரிய அளவில் 10 ஆயிரம் சன்மார்க்க அன்பர்கள் குறிப்பாக 2000க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்கின்ற வள்ளலார் சர்வதேச மாநாட்டை நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. அம்மாநாட்டில் வள்ளலாரின் பெருமைக்கு புகழ் சேர்க்கின்ற 25 சன்மார்க்கிகளுக்கு பட்டயம் வழங்கி சிறப்பு செய்திடவும், வள்ளலார் குறித்த நூலும் வெளியிடப்படவும் உள்ளது.

இப்படி அனைத்து வகைகளிலும் வள்ளலாரின் அறநெறிகளை பாதுகாக்கும் அரசாக திராவிட மாடல்அரசு திகழ்கிறது. இத்தகைய பணிகளுக்கு உறுதுணையாக இருக்கின்ற மாவட்ட அமைச்சர் எம்.ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், துறையின் அலுவலர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அனைவருக்கும் துறையின் சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருவெளிக்கு, வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கும் இடத்தால் எவ்வித இடர்பாடும் இல்லை என்று நீதிமன்றத்தில் நாங்கள் எடுத்து வைத்த வாதத்தின் அடிப்படையில் ஒரு பகுதியில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியிருக்கின்றது. மற்றொரு பகுதியில் உள்ள பல்வேறு ஆக்கிரமிப்புகளை கணக்கிட்டு, அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டதன்படி அறிக்கை அளித்துள்ளோம். நிச்சயமாக நீதி வெல்லும், வள்ளலார் சர்வதேச மையம் திறந்த மனதோடு, எவ்வித காழ்ப்புணர்ச்சிக்கும் இடம் தராமல் அவரது புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் அமைத்திட வேண்டும் என்ற இந்த நற்பணிக்கு வள்ளலாரின் ஆன்மா எல்லா வகையிலும் துணை நிற்கும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

### இருமல் மருந்து பாதிப்பு:

# ஸ்ரீசன் மருந்து நிறுவனத்தின் உரிமங்கள் முழுமையாக ரத்து!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, அக்.6-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன், இருமல் மருந்து பாதிப்பு தொடர்பான கேள்விக்கு அளித்த பதில் வருமாறு:-

கடந்த அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி அன்று பிற்பகல் சுமார் 3.30 மணியளவில், மத்தியப்பிரதேச மாநில மருந்து கட்டுப்பாடு துறையிடம் இருந்து, தமிழ்நாடு மருந்து கட்டுப்பாடு துறைக்கு ஒரு அவசர கடிதம் பெறப்பட்டது (01-10-2025 மற்றும் 02-10-2025 ஆகிய இரண்டு நாட்களும் அரசு விடுமுறை). அக்கடிதத்தில், மத்தியப் பிரதேச மாநிலம் சிந்த்வாரா மாவட்டத்தில் ஏற்பட்ட குழந்தைகள் மரணத்துக்கு தொடர்புடையதாக கருதப்படும் மருந்து, கோல்ட்ரிஃப் சிரப் (பாராசிட்டமால், ஃபீனைல்ஃப்ரைன் ஹைட்ரோகுளோரைடு, குளோரிபெனிரமைன் மெலேட் சிரப்), Coldrif Syrup (Paracetamol, Phenylephrine Hydrochloride, Chlorpheniramine Maleate Syrup) தொகுதி எண் (Batch No.): SR-13; தயாரிப்பு தேதி (Mfg Date): மே 2025; காலாவதி தேதி(Exp Date): ஏப்ரல் 2027; உற்பத்தியாளர் (Manufactured By): ஸ்ரீசன் பார்மசியூட்டிகள் (Sresan Pharmaceutical Manufacturer), எண். 787, பெங்களூரு நெடுஞ்சாலை, சுங்குவார்சத்திரம் (மதுரா), காஞ்சிபுரம் மாவட்டம்-602 106, மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக, அன்றைய தினமே (01-10-2025) சுமார் 4.00 மணியளவில், திரு. எஸ். குருபாரதி, துணை மருந்து கட்டுப்பாடு இயக்குனரின் உத்தரவின் பேரில், முதுநிலை மருந்துகள் ஆய்வாளர் (Senior Drugs Inspector) தலைமையிலான குழு, M/s. ஸ்ரீசன் பார்மசியூட்டிகள் நிறுவனத்தில் ஆய்வு மேற்கொள்ள விரைந்தனர். அக்குழு (01-10-2025 to 02-10-2025) மேற்கொண்ட தொடர் ஆய்வில் மருந்துகள் விதிகள், 1945-இன் கீழ் விதிமீறல்கள் கண்டறியப்பட்டு, சர்ச்சைக்குரிய மருந்தான கோல்ட்ரிஃப் சிரப் (Coldrif Syrup) Batch No: SR-13 உள்ளிட்ட 5 மருந்துகள் அவசர பகுப்பாய்வுக்காக எடுக்கப்பட்டு அரசு மருந்துகள் பகுப்பாய்வு கூடம், சென்னைக்கு அனுப்பப்பட்டது.

பகுப்பாய்வின் முடிவின் டைதிலீன் கிளைகால் (Diethylene Glycol, DEG) என்ற உயிர்க்கொல்லி நச்சு வேதிப்பொருள், கோல்ட்ரிஃப் சிரப்பில் (Coldrif Syrup) 48.6 சதவீதம் (48.6% w/v) இருப்பதாக 02-10-2025 அன்று கண்டறியப்பட்டது.

மேலும் 01-10-2025 அன்றே, துணை மருந்து கட்டுப்பாடு இயக்குனரின் உத்தரவின் பேரில் தமிழ்நாடும் முழுவதும் கோல்ட்ரிஃப் சிரப் (Coldrif Syrup) விற்பனை தடை செய்யப்பட்டது (Sales Banned). இந்த சந்தேகத்திற்குரிய மருந்து பொது மக்களை சென்றடைய கூடாது, எந்த உயிரிழப்பும் ஏற்பட கூடாது என்ற உயரிய எண்ணத்தோடு இந்த அதிரடி உத்தரவு தமிழ்நாடு அரசால் பிறப்பிக்கப்பட்டது.

தமிழ் நாட்டிலிருந்து ஒடிசா மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கு கோல்ட்ரிப் மருந்து விநியோகிக்கப்படுவதால், சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கும் இது தொடர்பான தகவல்கள், 01-10-2025 அன்றே மின்னஞ்சல் மூலமாக மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது.

இதையடுத்து, 03-10-2025 அன்று, ஸ்ரீசன் பார்மசியூட்டிகள், நிறுவனத்திற்கு பொது நலம் கருதி மருந்து உற்பத்தியை உடனடியாக நிறுத்த உத்தரவு (Stop Production Order) பிறப்பிக்கப்பட்டு அந்நிறுவனம் அதிகாரிகளால் உடனடியாக மூடப்பட்டது.

மேலும் தொடர் நடவடிக்கையாக ஸ்ரீசன் பார்மசியூட்டிகள் நிறுவனத்தின் மருந்து உரிமங்கள் முழுவதுமாக ஏன் ரத்து செய்யப்படக்கூடாது (Cancellation) என விளக்கம் கேட்டு குறிப்பாணையும் அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு, தகவல் பெறப்பட்ட 48 மணி நேரத்தில் தமிழ்நாடு அரசின் மருந்து கட்டுப்பாட்டுத் துறையால் மிக துரிதமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அம்மருந்து நிறுவனத்தில் புலனாய்வு மேற்கொண்டு, சர்ச்சைக்குரிய



மருந்தை ஆய்வுக்குட்படுத்தி, தயாரிப்பு நிறுவனத்தில் உள்ள மருந்துகளையும், தமிழ்நாடுத்தில் விற்பனையில் உள்ள மருந்துகளையும் தடைசெய்து, அம்மருந்தில் விஷத்தன்மையுள்ள வேதிப்பொருள் டைதிலீன் கிளைகால் (DEG) இருப்பதைக் கண்டறிந்து, அந்நிறுவனத்தின் மருந்து உற்பத்தியை உடனடியாக நிறுத்தி மூடப்பட்டு, மேல்நடவடிக்கையாக அந்நிறுவனத்தின் உரிமங்களை முழுமையாக ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல்கள் அனைத்தும் மத்தியப் பிரதேச மருந்து கட்டுப்பாட்டு துறைக்கும் உடனடியாக, 03-10-2025 அன்று மின்னஞ்சல் மூலமாக மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. இந்த நடவடிக்கைகள் அனைத்தும், தகவல் பெறப்பட்ட 48 மணி நேரத்தில், சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையில் கீழ் செயல்படும் மருந்து கட்டுப்பாட்டு துறையின் மூலம் தமிழ்நாடு அரசால் துரிதமாக மக்கள் நலம் கருதி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

### கோவை மாநகர் மாவட்ட தி.மு.க, மூத்த முன்னோடி

# தெப்பக்குளம் ஹாஜி ஜே.சிராஜுதீன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 6 -

கோவை மாநகர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் சுமார் 50 ஆண்டு காலத்திற்கும் மேலாக தன்னை இணைத்துக் கொண்டு,பணியாற்றியவர், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. தெப்பக்குளம் பகுதி (5 வது பகுதி) முதல் செயலாளர், பகுதிக் கழகச் செயலாளர், கழக பொதுக்குழு உறுப்பினர், தி.மு.கழக மேடைகளில் மிகச் சிறப்பாகப் பேசக்கூடிய ஆற்றல் படைத்த தலைமைக் கழகப் பேச்சாளர், ஹாஜி ஜே.சிராஜுதீன் அவர்கள் (வயது 78) வயது மூப்பு காரணமாக நேற்று இரவு கேரளா மாநிலம் கொழிஞ்சாபாறையில் உள்ள அவரது மகள் இல்லத்தில் மறைவுற்ற செய்தி அறிந்து பெரிதும் வருந்திய **கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரது குடும்பத்தாருக்கும் கோவை மாவட்டக் கழகத்தினருக்கும் தமது ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்துள்ளார்.**



தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா முன்னிலையில், கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதிஇளம்சுருதி தலைமையில், தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி 55வது வார்டு சார்பில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது, இக்கூட்டத்தில் எதிர்கொள்ள இருக்கிற 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை பொறுத்து ஆலோசிக்கப்பட்டது. உடன் மண்டலகுழு தலைவர் திரு.காமராஜ், பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ். சேகர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சென்னை பள்ளி மாணவர்களின் 100% தேர்ச்சிக்கு

# உறுதுணையாக இருந்த ஆசிரியர்களுக்கான கல்விச்சுற்றுலா!

## மேயர் திருமதி ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை,அக்.6-

மேயரின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் சென்னை பள்ளி மாணவர்களின் 100% தேர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களுக்கான கல்விச்சுற்றுலாவினை மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (05.10.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

மேயர் அவர்களின் 2023 24ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, சென்னை பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாணவர்கள் 100% சதவீதம் தேர்ச்சி பெற உறுதுணையாக இருந்த ஆசிரியர்கள் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், 2023 24ஆம் கல்வியாண்டில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாணவர்கள் 100% சதவீதம் தேர்ச்சி பெற உறுதுணையாக இருந்த 408 ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வண்ணம் கொடைக்கானல் (International School), ஏற்காடு, ஒகேனேக்கல் ஆகிய இடங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதனைத்தொடர்ந்து, 2024 25ஆம் கல்வியாண்டில் அரசு பொதுத் தேர்வில் சென்னை பள்ளி மாணவர்களின் 100% சதவீதம் தேர்ச்சி பெற உறுதுணையாக இருந்த 550 ஆசிரியர்களை ஊக்குவிக்கும் விதமாக, திருச்சி IIM, NIIT மற்றும் கொடைக்கானல் International School போன்ற கல்வி நிறுவனங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட இருக்கின்றனர். அதன் ஒருபகுதியாக, முதற்கட்டமாக 184 ஆசிரியர்களின் கல்விச் சுற்றுலாவினை மேயர் அவர்கள் இன்று (05.10.2025) கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

மேலும், 08102025 அன்று 91 ஆசிரியர்களும், 12102025 அன்று 184 ஆசிரியர்களும், 15102025 அன்று 91 ஆசிரியர்களும் என மொத்தம் 550 ஆசிரியர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் வாயிலாக 4 வாரங்களில் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் ‘‘திராவிடம் செய்தது என்ன? வாங்க பேசுவோம்’’ எனும் தலைப்பில் கலந்துரையாடல் கூட்டம் எழும்பூர் தொகுதி, வார்டு எண்.77, புளியந்தோப்பு, மோதிலால் தெரு ஆசிர்வாதபுரம் தெரு சந்திப்பில் நடந்தது. இக்கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்துகொண்ட அப்பகுதி இளைஞர்கள் இத்தலைப்பு குறித்துக் கேட்ட கேள்விகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் பதில் அளித்தார்.



சென்னை மாநகரப் போக்குவரத்து ஊழியர் முன்னேற்ற சங்கத்தின் நிறுவனர் வி.எம்.ஆர். பிறந்தநாளை முன்னிட்டு பி.டி.சி. பணிமனை செயலாளர் ஆர்.ரமேஷ்குமார், ஏற்பாட்டில் தலைமை நிலைய செயலாளர் ஏ.தங்கராஜ், வி.ரவிச்சந்திரன் இனிப்பு வழங்கி புகழஞ்சலி செலுத்தப்பட்டது. உடன் நிர்வாகிகள் ஆர்.பிரபாகரன், என்.ராமு, கே.பாஸ்கரன், கோவில் எம்.ரகுராஜ், பி.ஆத்மா நாபன், எஸ். சுதாகர், ஸ்டாலின், சந்தோஷ், பி.சுகுமார் ஆகியோர் உள்ளனர்.